**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, NAGERCOIL.**
**Case Number: CC.330/2022**
**PW:1**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.தமிழ்செல்வி | LW | : 2 |
| Father's / Husband Name | : திரு. முருகன் | Occupation | : கூலி |
| Village | : ராமன்புதூரில் | | |
| Taluk | : அகஸ்தீஸ்வரம் | Age | : 53 |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 r/w RULE 35 OF CRIMINAL RULES OF PRACTICE 2019 THE DAY OF 22.07.2025**

**(4 ம் எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது. 1, 2, 3 எதிரிகள் ஆஜர்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**-

1. நான் தற்போது ராமன்புதூரில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. புகார்தாரர் மணிகண்டன் என்னுடைய அக்கா பத்மாவின் மகன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு மணிகண்டன் காலமாகிவிட்டார். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154(1)ன் கீழ் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**-

1. கடந்த 01.03.2021ம் தேதி காலை 10.30 மணிக்கு கோல்டன் தெருவில் உள்ள எனது உறவினர் ரமேஷ் என்பவர் வீட்டிற்கு முன்பு சென்று கொண்டிருந்த போது அப்போது புகார்தாரர் மணிகண்டன் என்பவர் அங்கு வேலை பார்த்து கொண்டிருந்த ஆஜர் எதிரிகளிடம் தான் கொத்த வேலை செய்த சம்பளத்தை கேட்டார் என்றும் அதற்கு ஆஜர் எதிரிகள் மணிகண்டனை பார்த்து கெட்டவார்த்தை பேசி எதிரி அரவிந்த் என்பவர் மணிகண்டனின் பின்பக்கமாக பிடித்து வைத்து போது எதிரி விக்னேஷ் என்பவர் அவர் கையில் இருந்த செங்கல்லால் மணிகண்டனின் வலது கையில் அடித்து சுத்தியலால் நெஞ்சில் தாக்கியும் மணிகண்டன் சத்தம்போடவே சம்பவத்தை பார்த்த நானும் அங்கிருந்தவர்களும் ஓடிவரவே ஆஜர் எதிரிகள் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டி அங்கிருந்து சென்ற விபரத்தை போலீசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.2
நாகர்கோவில்

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, NAGERCOIL.**
**Case Number: CC.330/2022**
**PW: 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.பத்மா | LW | : 3 |
| Father's / Husband Name | : திரு.மகாதேவன் | Occupation | : வீட்டில்இருந்து வருகிறேன். |
| Village | : ராமன்புதூர் | | |
| Taluk | : அகஸ்தீஸ்வரம் | Age | : 60 |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 r/w RULE 35 OF CRIMINAL RULES OF PRACTICE 2019 THE DAY OF 22.07.2025**
**(4 ம் எதிரி ஆஜரில்லை மனுதாக்கல் செய்யப்பட்டது. 1, 2, 3 எதிரிகள் ஆஜர்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**-

1. நான் தற்போது ராமன்புதூரில் வசித்து வருகிறேன். நான்வீட்டில் இருந்து வருகிறேன். புகார்தாரர் என்னுடைய மகன். ஆஜர் எதிரிகள் மற்றும் சந்திரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பு புன்னைநகர் புஷ்பா காம்பவுன்டிற்குள் கட்டிடவேலை நடந்து கொண்டிருந்தது. எனது மகனை அங்கு வேலைக்கு செல்லவேண்டாம் என்று கூறிவிட்டு நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அப்போது காலை 10.00, 11.00 மணியளவில் ஒரு நபர் எனக்கு போன் செய்து பையன்மார்கள் என் மகனை அடிப்பதாக கூறினார்.

2. அப்போது நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அந்த சமயத்தில் ஆஜர் எதிரிகள் மற்றொரு எதிரியும் அங்கிருந்து கிளம்பினார்கள். நான் அவர்களை பார்த்து நில்லுங்கள் என்றும் காவல் நிலையத்தில் வழக்கு கொடுப்பேன் என்றும் ஏன் இப்படி எனது மகனை அடித்தீர்கள் என கேட்டேன். உடனே எனது மகன் தனது நெஞ்சி வலிக்கிறது என்றும் ஒரு மாதிரி படபடப்பாக வருகிறது என்று கூறினார். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு நான் எனது மகனை அழைத்து சென்றேன். அங்கே அவர் ஒரு 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக என் மகன் புகார் வாக்குமூலம்கொடுத்தார். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய மகன் கையொப்பம். நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். **என்னுடைய கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1. எனது மகனுக்கு வெட்டு வலிப்பு நோய் இருந்தது என்றால் சரிதான். சம்பவத்திற்கு சுமார் ஐந்து வருடத்திற்கு முன்பே எனது மகனுக்கு வலிப்பு வரும். வலிப்பு வரும்போது கீழே விழுவார் என்று சொன்னால் நான் வீட்டில் இருக்கும் போது வலிப்பு வரும் என்பதால் மாத்திரை கொடுப்பதாக சாட்சி கூறுகிறார். மாத்திரை சாப்பிட்ட பின்பு உறங்கிவிடுவதாகவும் சாட்சி கூறுகிறார். உங்கள் கண் முன்னே அவருக்கு எத்தனை முறை வலிப்பு வந்துள்ளது என்றுசொன்னால் தூக்கத்தில் தான் வரும். எத்தனை முறை என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

2. உங்களுக்கு உங்கள் மகனை அடித்ததாக 12.00 மணிக்கு போன் வந்ததா என்றால் 11.00 மணிக்கு வந்தது. அப்போது நிங்கள் எந்த இடத்தில் வேலை பார்த்து வந்தீர்கள் என்றால் அந்த சமயத்தில் ராமன்புதூரில் மீன் கடை அருகில் உள்ள வீட்டில் சமையல் வேலை செய்து வந்தேன். நீங்கள் உங்களுடைய உரிமையாளரிடம் தகவலை சொல்லிவிட்டு அங்கிருந்து ஒருமணி நேரத்திற்குள் கிளம்பி இருப்பீர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும் நீங்கள் வேலை பார்க்கும் இடத்திற்கும் 2 கி.மீ இருக்குமா என்றால் ஒரு அரைமணி நேரத்தில் நடந்து செல்லலாம்.

3. நிங்கள் போகும் போது எதிரிகள் யாரும் அங்கு இல்லை என்று சொன்னால் நான் பிடித்து வைத்திருந்தேன் ஓடிவிட்டார்கள். போலீசார் உங்களை என்று விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் சொன்னேன் போலீசார் எழுதிக்கொண்டார்கள். உங்களை ஏட்டு தான் விசாரித்தார்கள் என்றுசொன்னால் அவர் யார் என்று தெரியாது. காலை 11.30 மணியளவில் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன்பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் உங்கள் மகனை விசாரித்த விபரம் தெரியுமா என்றால் விசாரித்ததாக என்னுடைய மகன் சொன்னார். என் மகனை போலீசார் விசாரிக்கும்போது நான் அங்கு இல்லை.

4. சம்பவ இடத்திற்கு நான் வந்து எதிரிகளை பிடித்து வைத்திருந்தேன் என்றும் அவர்கள் ஓடிவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் சொல்லவில்லை. போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றும் நீங்கள் சொன்னது போல் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றுசொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதை தவிர போலீசார் விசாரணையில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். உங்கள் மகனுக்கு சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகளால் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் உங்கள் மகனுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

5. உங்கள் மகனுக்கு வலிப்பு நோயால் எங்கையோ வைத்து விழுந்ததால் காயம் என்றுசொன்னால் சரியல்ல. உங்கள் மகனுக்கு வலிப்பு நோயுடன் மன நோயும் உள்ளது என்றால் சரியல்ல. உங்கள் மகனுக்கு யாரை பார்த்தாலும் பணம் கேட்கும் பழக்கம் உள்ளது என்றுசொன்னால் சரியல்ல. என் மகன் சம்பளம் கேட்டதால் எதிரிகள் அடித்தாக சாட்சி கூறுகிறார். நீங்கள் சொன்ன தேதியில் எதிரிகள் அந்த இடத்திற்கு வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு 10 நாட்களுக்கு முன்பு எதிரிகளிடம் உங்கள் மகன் பணம் கேட்டார் என்றும் எதிரிகள் பணம் கொடுக்கவில்லை என்று அந்த முன்விரோதத்தை வைத்து சம்பவ தேதியில் வலிப்பு நோயால் ஏற்பட்ட காயத்தை வைத்து பொய்யாக கொடுக்கப்பட்ட புகார் என்றுசொன்னால் சரியல்ல. தமிழ்செல்வி அ.சா.1 என்னுடைய உடன்பிறந்த இளைய சகோதரி ஆவார்.

மறு விசாரணை இல்லை.

நீதிமன்ற கேள்வி 1 – உங்கள் மகன் எப்போது இறந்தார் என்றால்

பதில் - 2, 3 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். தேதி மாதம் ஞாபகம் இல்லை.

கேள்வி 2- உங்கள் மகனின் இறப்பு சான்று வாங்கிவிட்டீர்களா என்றால்

பதில் - வாங்கவில்லை.

கேள்வி 3- உங்கள் மகன் எப்படி இறந்தார் என்றால்

பதில் - ஒரு நாள் தூங்கிகொண்டிருக்கும் போது நெஞ்சு வலிப்பதாக சொல்லி இறந்துவிட்டார்.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.2
நாகர்கோவில்